Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 8 ஆகஸ்ட் 2014

தனிப்பிரதி ரூ.10/-



முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும்
அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும்
குறித்திருக்கிறார்.
( அப்போஸ்தலர் 17 : 26 )

## 17th Annual Bible Lectureship

## 17 ஆம் வேதாகம கருத்தரங்கம்

### கருப்பொருள் : கிறிஸ்தவ குடும்பம்

**2014, அக்டோபர் 2,3 [ வியாழன், வெள்ளி ]**

இடம்:

**கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும்,தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும்,பெண்களுக்கும் தனித் தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 98427 30382, 99655 30385, 98652 90572

## ஆசானின் அறிவுரையிலே ...


ஆசிரியர் உரை ............. 1

கருத்தரங்கம் ..................... 9

ஏன் விசுவாசம் ................... 10

பெண்கள் பகுதி ....................... 14

வாலிபர் பகுதி ...................... 17

சிறுவர் பகுதி ........................ 20

நாயைக் காதைப் பிடித்து ........ 22

வசன ரீதியான .................... 25

கிறிஸ்தவ திருமணம் ............ 27

உங்கள் சிந்தனை................. .28


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

[illegible]

[illegible]

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 27 AUGUST - 2014 Issue - 8**


ஆசிரியர் உரை

# வந்து பாருங்கள்

செம்மொழியாம் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு " வந்து பார் " அல்லது " வந்து பாருங்கள் " என்னும் சொற்றொடர்கள் புதுமையாகத் தெரிவதற்குப் பெரிதாக வாய்ப்பில்லை. ஏனெனில், இப்பூலோக வாழ்க்கைப் பாதையில் இச்சொற்றொடர்களை ஏதாவதொரு கட்டத்தில் நாம் பேசியிருப்போம் அல்லது பேசவாவது கேட்டிருப்போம். பொதுவாக இச்சொற்றொடர்கள் இரண்டு சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும். முதலாவது, தெரியாத ஒன்றை ஒருவர் தெரிந்து கொள்ளும்படியாக அழைக்கும்போது " அட, வந்து பார் " மற்றும் " அட வந்து பாருங்கள் " என்று சொல்லப்படும். அடுத்து, இரண்டு தரப்பாருக்கு இடையே சச்சரவு எழும்போது, வலு கூடிய ஒரு தரப்பு, வலு குறைந்த எதிர்த்தரப்பை எச்சரிக்கும்படியாக, " வந்து பார் " அல்லது " வந்து பாருங்கள் " நடப்பதே வேறு என்று கூறப்படும்.

இவ்விரண்டில், "வந்து பாருங்கள்" என்னும் நம் தலைப்பு, முதல் ரகத்தைச் சார்ந்ததாக உள்ளது. இப்பாமுலகை மீட்கும் படியாக வந்த இயேசு இரட்சகரின் வாயிலிருந்து வந்த இச்சொற்றொடரைத் தாங்கியுள்ள வசனம் யோவான் நற்செய்தி 1:39 ல் இடம் பெற்றுள்ளது. அவர், " வந்து பாருங்கள் " என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத் தினம் அவரிடத்தில் தங்கினார்கள்". அப்பொழுது ஏறக்குறைய பத்துமணி வேளையாயிருந்தது.

வந்து பார், வந்து பாருங்கள் என்னும் இச்சொற்றொடர்கள் இயேசு ஆண்டவரால் மாத்திரம் பேசப்படாமல் வேறுசிலராலும் பேசப்

பட்டிருக்கிறது. ஆயினும், அவைகளுக்குள்ளாகச் செல்லாமல் இப்பகுதியை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு நாம் தொடரப்போகிறோம்.

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, நம் தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனத்தின் பின்னணி குறித்துக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

அந்த நாட்கள் இயேசு ஆண்டவரின் பூமிக்குண்டான ஊழியம் ஆரம்பமான ஒரு காலகட்டம். எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாய் இயேசுவானவர் யோவானாலே திருமுழுக்குப் பெற்று (மத் 3:15,16), பிசாசினால் வனாந்திரத்தில் நாற்பது நாள் சோதனையையும் வெற்றி கரமாக முடித்த நாட்கள். இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்யும்படியாக வந்த யோவான் ஸ்நானனும் தன்னுடைய ஊழியத்தில் தீவிரம் காட்டின வேளை அது. அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான், யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு, " இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி " என்றான் (யோவான் 1:29).

யோவான் இங்கே இயேசுவை " ஆட்டுக்குட்டி " என்றும், " தேவ ஆட்டுக்குட்டி " என்றும் அழைத்ததற்கு ஆழமான பொருள். ஆம், இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததை நினைவுகூரும்படி கொண்டாடப்பட்ட, பஸ்காவின் போது அடிக்கப்படும் பழுதற்ற ஆட்டுக் குட்டியின் மாதிரியாக இயேசு இருக்கப்போகிறபடியால் அவர் *ஆட்டுக்குட்டி* என்றும், இந்த ஆட்டுக்குட்டி *வானத்திலிருந்து தேவனால் அனுப்பப்பட்டு வந்த படியால்* தேவ ஆட்டுக்குட்டி என்றும் யோவான் கூறியுள்ளான். இந்த தேவ ஆட்டுக் குட்டி உலகத்தின் பாவத்தை எடுத்தோ அல்லது நீக்கியோ போடும் என்று அவன் சொல்லவில்லை. மாறாக, சுமந்து, அதாவது, உலகத்தாருடைய பாவத்துக்கான பழியைத் தன்மீது ஏற்றுக்கொண்டு தீர்த்துப்போடும் என்று வெளிப்படுத்துகிறார். ஒரே ஒரு வாக்கியம், எவ்வளவு பொருளைக் கொடுக் கிறதென்று பாருங்கள் !

இயேசுவைப் பற்றி, யோவான் இப்படியாகக் கூறிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான், இயேசு நடந்து வந்திருக்கிறார். அப்பொழுது, யோவானும், இரண்டு சீடர்களும் அங்கே நின்றிருந்திருக்கிறார்கள். மீண்டும் யோவான் அதேவிதமாக அறிவிக்கிறார். " இதோ, தேவ ஆட்டுக் குட்டி " என்று (யோவான் 1:36). இதைக்கேட்ட யோவானின் சீடர்கள், இயேசுவுக்குப் பின் சென்றார்கள். தாங்கள் இதுகாறும் பின்பற்றின யோவானை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றுவதில் அவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. அங்கே தன்னை அவர்கள் பின்பற்று வதைத் திரும்பிப் பார்த்த இயேசு, " என்ன தேடுகிறீர்கள் " என்றார். இயேசுவின் இக்கேள்வியால், அவரைப் பின்பற்றுவதற்கான தங்கள் நோக்கம் சிதைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்ட சீடர்கள், "ஆதாயத்திற்காக நாங்கள் உம்மைப் பின்பற்றவில்லை என்பதை அவருக்குத் தெரிவிக்கும்படியாகவும், நீர்தான் எங்களுக்கு வேண்டும்"

என்பதை அவருக்கு அறிவிக்கும்படியாகவும், " *ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்* " என்று கேட்டார்கள் (யோவான் 1:38).

அவர்களின் இக்கேள்விக்குப் பதிலளிக்கும்படியாகத்தான் இயேசு, "*வந்து பாருங்கள்*" என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது (யோவான் 1:39). இங்கே, அடுத்த வசனங்களைக் கவனியுங்கள். " யோவான் சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின்சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது, தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு *மேசியாவைக் கண்டோம்* என்று சொன்னான்; மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம் " (யோவான் 1:40,41).

மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு, " *நீ எனக்குப் பின் சென்று வா* " என்றார் (யோவான் 1:43). யோவானுடைய சீடர்களைப் போல இந்தப் பிலிப்புவும் இயேசுவின் அழைப்பை ஏற்று அவருக்குப் பின்சென்றுள்ளான். அப்படி இயேசுவை பின்பற்றிப் போய் பார்த்ததின் விளைவாக, நாத்தான்வேலைக் கண்டு, *நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்;* அவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான் " (1:45). அங்கே நாத்தான்வேல், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்றபோது, " *வந்து பார்* " என்றான் (1:46). பிலிப்புவின் அழைப்பை ஏற்றுச் சென்ற போது, "*இயேசு நாத்தான்வேல் தம்மிடத்தில் வரக்கண்டு, அவனைக் குறித்து,* " *கபடற்ற உத்தம இஸ்ரவேலன்* " என்றார் " (யோவான் 1:47). அப்பொழுத தொடர்ந்து நடந்த உரையாடலுக்குப் பிறகு நாத்தான்வேல், " *ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா* " என்றான் (1:49).

இப்பகுதியில் நாம் கவனித்த " வந்து பாருங்கள் ", " பின் சென்று வா ", " வந்து பார் " ஆகிய மூன்று சொற்றொடர்கள் இப்பொழுது நமக்குப் பாடம் கற்றுக் கொடுக்கத் தயாராக உள்ளன. அவைகளிலிருந்து நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள நாம் இப்பொழுது முயற்சிப்போம்.

## I. யோவானின் சீடர்களும், வந்து பாருங்கள் என்பதும்

இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட " வந்து பாருங்கள் " என்னும் சொற்றொடரை ஆதாரமாக வைத்து, நமக்கு முதல் பாடம் கற்றுக் கொடுப்பவர்கள் யோவானின் சீடர்கள்.

இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்யும்படியாக வந்த யோவான் ஸ்நானன் அந்நாட்களில் மிகப்பெரிய ஊழியத்தைச் செய்தார். இவர்

தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர் (ஏசாயா 40:35). தேவ தூதர் களால் முன்னறிவிக்கப்பட்டுப் பிறந்தவர் (லூக்கா 1:11-20). இயேசு ஆண்ட வரை ஞானஸ்நானப்படுத்தியவர் (மத்தேயு 3:14-16). பரிசுத்தத்தோடும், நீதியோடும் வல்லமையாக ஊழியம் செய்தவர் (மாற்கு 6:20). இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனுமில்லை (மத் 11:11). இயேசு ஆண்டவரால் பகிரங்கப்படுத்தப்பட்டவர். இப்படிப்பட்ட ஒருவருக்கு சீடர்களாக இருந்தவர்களில் இரண்டு பேர்தான் அந்திரேயாவும், இன்னொருவரும்.

இந்த இரண்டு பேரும், " இதோ, தேவ ஆட்டுக்குட்டி ", என்று சொன்ன மாத்திரத்தில், யோவானை அங்கே தானே அப்படியே விட்டு விட்டு இயேசுவுக்குப் பின் சென்றார்கள். தாங்கள் இதுகாறும் ஏற்றுப் பின் பற்றின யோவான் ஸ்நானனை அம்போ என்று விட்டு விட்டு, இயேசுவின் பின்னே செல்ல அப்படி என்ன குறைகள் யோவானிடம் இருந்தது? அவரு டைய போதனையில் ஏதாவது விகற்பம் இருந்ததா? அல்லது ஒழுக்கக் காரியங்களிலும், பக்திச் செயல்பாட்டிலும் ஏதாவது பிரச்சனை காணப் பட்டதா? அல்லது தன் ஊழியத்தை இத்தோடு முடித்துக் கொள்ளப் போகிறேன் என்று ஏதாவது அறிவிப்பு தான் கொடுத்தாரா? என்ன தான் பிரச்சனை? இக்கேள்விகளுக்கான பதில், ஒன்றுமில்லை என்பதை விட ஒன்றுமே இல்லை என்பது தான் சரியாக இருக்கும்.

இங்கே எழக்கூடிய மிகப்பெரிய கேள்வி, அப்படியானால், ஏன் அவனை விட்டுப் போனார்கள்? என்பதுதான். இதற்கான விடையைக் கண்டுபிடிப்பதற்குப் பெரிய மேதாவித்தனம் ஒன்றும் தேவையில்லை. சூழ்நிலையின் ஆழத்தைக் கொஞ்சம் அறிந்து கொண்டால் அதுவே போதும். அங்கே யோவானின் சீடர்கள் யோவானைப் பின்பற்றுவதில் முழு திருப்தியோடு இருந்திருந்தாலும், தங்களுக்குக் காட்டப்படுபவர் தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பவரைக் காட்டிலும் வேதவாக்கியங்களின் படி மேலானவர் என்பதை அறிந்து உணரும் சந்தர்ப்பம் வந்தபோது, உடனடியாக அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் அவ்வளவு தான். யோவான் என்ன நினைப்பார்? யோவானுடைய மற்ற சீடர்கள் என்ன நினைப்பார்கள்? ஊர் என்ன சொல்லும்? உலகம் எப்படிப் பார்க்கும்? என்பது பற்றியெல்லாம் கிஞ்சித்தும், கவலைப்படவில்லை. அதுகாறும் தாங்கள் அறிந்ததை நடப்பித்து வந்தவர்கள், அதைக்காட்டிலும் உன்னத மானதற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் வேளை வந்த போது, எவ்விதத் தயக்கமும் இல்லாமல் கன கச்சிதமாகக் காரியங்களை நடப்பித்தனர்.

அருமையானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்திலும், கிறிஸ்துவை நாங்களும் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்களிடத்திலும் இப்படிப் பட்ட சிந்தை உள்ளதா? இயேசுவாலே சந்திக்கப்பட்ட தேர்ந்த தேவ தாசனாகிய அப்போஸ்தலன் பவுலுக்குள்ளாக இருந்த சிந்தை,

யோவானைப் பின்பற்றின இந்த இரண்டு பேருக்குள்ளாக அப்பொழுது இருந்திருக்கிறது. ஆம், கலாத்தியருக்குப் பவுல் எழுதும் போது, " *தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமா யிருந்த போது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ண வில்லை* " என்று கூறியுள்ளார் (கலா. 1:16).

ஆனால், நாம் என்ன செய்கிறோம்? எப்படிச் செயல்படுகிறோம்? இதுதான் உண்மை, இதுதான் சத்தியம், இதுதான் இயேசு கட்டளையிட்ட வைகள், இது தான் அப்போஸ்தலர் உபதேசித்தவைகள் இதுதான் ஆதித் திருச்சபையார் கைக்கொண்டவைகள் என்று வேதவசனங்களின் வெளிச்சத்தில் விளக்கிக் காட்டினாலும், எப்படியெல்லாம் போக்குக் காட்டு கிறோம்! கூறும் சாக்குப்போக்குகளைச் சொல்லிமாளாது. இது எப்படி நியாயமாகும்?

ஒன்றை இங்கே நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். அந்த இரண்டு சீடரும், இயேசுவின் அழைப்பை ஏற்று அங்கே சென்று, அவரோடு தங்கினதற்குப் பிறகுதான், அவர்களாகவே, " மேசியாவைக் கண்டோம் " என்று சொல்ல முடிந்தது. யோவான் நல்லவர் தான். ஆனால், அவரோடு இருந்த போது இந்த உண்மையை அறிந்து கொள்ள முடியவில்லை. இயேசுவிடம் சென்ற பிறகு தான், உண்மையை அறிந்து கொள்ளவும், மற்றவர்களுக்கு அதைச் சொல்லவும் முடிந்தது.

ஆகவே, வீண் பிடிவாதம் காட்டாமல், பாரம்பரியப் பெருமை பேசிக் காலத்தைக் கழிக்காமல், இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களிடம் வந்து சேருங்கள். அப்பொழுது தான் இதுவரைக்கும் நீங்கள் அறியாததை அறிந்து கொள்ள முடியும்.

## II. சீடன் பிலிப்புவும், " எனக்குப் பின் சென்று வா " என்பதும்

இயேசுவாலே " எனக்குப் பின் சென்று வா " என்று சொல்லப்பட்ட சொற்றொடரை ஆதாரமாகக் கொண்டு நமக்கு இரண்டாம் பாடம் கற்றுக் கொடுப்பவர் சீடன் பிலிப்பு.

அந்திரேயா மூலம் பேதுரு தம்மிடம் வந்த பிறகு, இயேசு கலிலேயாவுக்குப் போகத் தீர்மானித்தார். ஏனெனில், தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்து அங்குதான் இருந்தது. மண் வாசனை என்பது மானிடர் எல்லோருக்கும் பொதுவானது. மனித குமாரனாக வந்த இயேசுவும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. தன்னுடைய பூமிக்குரிய ஊழியத்தைக் கலிலேயாவில் தொடங்க முடிவெடுத்தார். அப்பொழுது தான் பிலிப்புவை அவர் காண்கிறார். பேதுரு, அந்திரேயா, பிலிப்பு, இவர்களெல்லாம் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பிலிப்பு என்பதற்கு " குதிரைகளின் நேசன் " என்று பொருள். அங்கே யோவானின்

சீடர்கள் இயேசுவைக் கண்டார்கள். ஆனால், இங்கே இயேசு பிலிப்புவைக் கண்டார். கண்டது மாத்திரமல்ல, " நீ எனக்குப் பின்சென்று வா " என்றார்.

அப்படிப் பின்சென்றதன் ஆவிக்குரிய நற்பயனை இவன் நாத்தான் வேலிடத்தில் பேசின உரையாடலிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும். பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, *நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்.* அவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றார். (யோவான் 1:45). இங்கே " நியாயப்பிரமாணம் " என்பது ஐந்து ஆகமங்களையும், "தீர்க்கதரிசிகள் " என்பது இயேசுவின் காரியங்களை முன்னுரைத்த ஏசாயா, தானியேல், யோவேல் போன்றவர்களையும் குறிக்கிறது. பிலிப்பு இயேசுவிடம் சென்று அவருடைய பேச்சுக்களையும், பிற செயல்பாடு களையும் கண்டு அவைகளை வேத வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, அவர்கள் எழுதியுள்ளதும், குறிப்பிடுவதும் இவர் தான் என்ற முடிவுக்கு வந்து, நாத்தான் வேலிடம், " மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிற வரைக் கண்டோம் " என்று அறுதியிட்டுக் கூறினான். இது வேதாகமத்தில் பிலிப்புவிற்கு இருந்த ஆழ்ந்த அறிவைக் காட்டுகிறது என்கிற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், அந்த அறிவு ஆவிக்குரிய ரீதியில் அவன் அறிந் திருக்க வேண்டியதை அதுவரைக்கும் அறிந்து கொள்ள உதவவில்லை என்கிற வருத்தத்தையும் தருகிறது. இயேசுவிடம் சென்ற பிறகு தான் அறிந்து கொள்ள வேண்டியதை அவனால் அறிந்து கொள்ள முடிந்தது.

அன்பானவர்களே, இன்றைக்கும் அநேகர் பிலிப்புவைப் போல் இருக்கவே செய்கிறார்கள். வேதவசனங்களில் தேர்ச்சி அடைந்தவர்களா கவும், அவைகளில் நன்கு பரிச்சயம் பெற்றவர்களாகவும், தினந்தோறும் வேதத்தை வாசிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆயினும், இரட்சிப்பு சம்பந்தமாக, சபை சம்பந்தமாக, ஆராதனை சம்பந்தமாக, நித்திய வாழ்க்கை சம்பந்தமாக அறிந்து கொள்ள வேண்டியவைகளை அறியாத வர்களாக தங்கள் பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளார்கள். பிலிப்பு இயேசுவிடம் வந்த பிறகு தான், ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவனாகக் " கண்டோம் " என்று கூறினான்.

அதுபோலவே, நாம் ஒவ்வொருவரும் இயேசுவிடம் வர வேண்டும். இயேசு இன்று சரீரத்தில் இல்லாதபடியால், இன்றைக்கு நாம் இயேசுவிடம் நேரிடையாகச் செல்லமுடியாது. ஆனால், இயேசுவின் உபதேசங்கள் நமக்குண்டு. அவைகள் புதிய ஏற்பாட்டிலே வெளிப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. யோவான் (14:26; 16:23) அந்த உபதேசம் எல்லா வற்றுக்கும் மேலானதாக உள்ளது (2 தீமோ 3:16, 17) அந்த உபதேசங் களுக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்படி ஒப்புக் கொடுக்கும் போதுதான் பரத்துக்கடுத்த நம் பக்தி வாழ்க்கையில், கண்டு கொள்ள வேண்டியவைகளைக் கண்டுகொள்ள முடியும். அப்படிக் கண்டு

கொள்ளாமல் வெறுமனே வேத அறிவை மாத்திரம் வளர்த்துக் கொள்வதில் பயனேதுமில்லை. பிலிப்பு இயேசுவிடம் வராமல் இருந்திருந்தால், அவன் வேத அறிவு அவனுக்கு எந்த ஒரு நன்மையையும் ஆவிக்குரிய ரீதியில் செய்திருக்காது.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உபதேசத்தையும், அந்த உபதேசம் வலியுறுத்தும் உண்மைகளையும் அறிந்து இயேசுவின் இரட்சிப்பையும், இயேசுவின் சபையையும் கண்டு கொண்டோம் என்று சொல்லத்தக்கவர்களாகவும், தான் கண்டு கொண்டதை நாத்தான் வேலுக்கு தைரியமாக எடுத்துச் சொன்னதுபோல நாமும் பிறருக்கு, இயேசுவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பையும், இயேசு வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய் சபையையும் எடுத்துச் சொல்லுகிறவர்களாகவும் மாறுவோம்.

**III. நல்லவன் நாத்தான்வேலும், " வந்து பார் " என்பதும்**

சீடன் பிலிப்பாலே, " வந்து பார் " என்று சொல்லப்பட்ட சொற்றொடரை ஆதாரமாகக் கொண்டு நமக்கு இன்னுமொரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பவர் " கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான்வேல் ".

சீடன் பிலிப் நாத்தான்வேலைக் கண்டு " நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் ". அவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்ற போது, நல்லவன் நாத்தான்வேல் அதை ஏற்றுக் கொள்ளாமல், " நாசரேத்தி லிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா " என்று எதிர்க் கேள்வி எழுப்பினான். அதற்குக் காரணம் இருந்தது. இந்த நாத்தான்வேல், இயேசு தனது முதலாம் அற்புதத்தை நடத்தின கானா ஊரைச் சேர்ந்தவன். இது நாசரேத்துக்குப் பக்கத்துக் கிராமம். அதன் நிறை, குறைகளை நன்கு அறிந்தவன். ஆகவே, தைரியமாக இப்படித் தன் எண்ணத்தை வெளிப் படுத்தினான். ஆனால், நாத்தான்வேலின் இக்கருத்தால் பிலிப்பு சோர்ந்து போகவில்லை. அவனை இயேசுவிடம் அழைத்து வரவேண்டுமென்ற தன் முயற்சியை அங்கே கைவிடவுமில்லை. ஏனெனில், தான் கண்டு கொண்டதைக் குறித்த திடமான நம்பிக்கை இருந்தது. ஆகவே, நாத்தான் வேலின் கருத்துக்குப் பதிலளித்து பேச்சை வளர்க்க முயற்சிக்காமல், " வந்து பார் " என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி முடித்துக் கொண்டான்.

அங்கே நாத்தான்வேல், பிலிப்புவின் அழைப்பை ஏற்று இயேசுவிடம் சென்றபோது, அவன் வருவதைக் கண்ட இயேசு, " இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் " என்றார். யாரிடமிருந்து எப்படிப்பட்ட சான்றிதழ் கிடைத்திருக்கிறது பாருங்கள்! இதை விட வேறு என்ன வேண்டும்? " ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் " (லூக்கா 1:28) என்று மரியாளைப் பார்த்து தேவதூதன் சொன்னதுபோல், "இஸ்ர வேலருக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவன் " என்று நாத்தான் வேலைப் பார்த்து நாமெல்லாரும் சொன்னால்கூட அது தகும்தானே! சரி, பெரும் பிரயாசைக்குப் பிறகு நாத்தான்வேல் இயேசுவிடம் வந்த பிறகு,

*"ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா "* என்றான் (யோவான் 1:49). பிலிப்பு இயேசுவை யோசேப்பின் குமாரன் என்று சொன்ன போது, நம்ப மறுத்து, நாசரேத்திலிருந்து நன்மை வருமா என்றவன், பிலிப்பு சொன்னதற்கும் மலையளவு மேலாக, "தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் ராஜா " என்று புகழாரம் சூட்டினான்.

இந்த மாற்றம் எப்பொழுது வந்தது அல்லது இந்த உண்மை எப்பொழுது தெரிந்தது? பிலிப்புவின் அழைப்பை ஏற்று வந்த பிறகு தான். நாத்தான்வேல் இயேசுவின் பார்வையில் படும் அளவுக்கு கபடற்றவனாகவும், உத்தமனாகவும் வாழ்ந்து வந்தானல்லவா அப்பொழுதெல்லாம் இந்த உண்மை புரியவில்லை. கபடற்றவனாகவும், உத்தமனாகவும் தான் வாழ்ந்த போது கண்டுகொள்ள முடியாத ஆவிக்குரிய உண்மைகளை, இயேசுவிடம் வந்த போது தான் காண முடிந்தது! இதிலிருந்து ஏதாவது உங்களுக்கு விளங்குகிறதா? விளங்கியாக வேண்டும். இல்லையென்றால் நாம் விளங்கவே மாட்டோம். புரிகிறதா?

அருமையானவர்களே, இன்றைக்கு உலகளவிலும், கிறிஸ்தவத்திலும் நாத்தான்வேல் போல அநேகர் நல்லவர்களாகவும், கபடற்றவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். வேறு பலர் நல்லவர்களாகவும், கபடற்றவர்களாகவும் இல்லாவிட்டால் கூட தங்களை அப்படியாக நினைத்து வாழ்ந்து கொண்டுள்ளார்கள். உண்மையாகவே நல்லவர்களாக வாழ்வதாலும் அல்லது நல்லவர்களாக நினைத்து வாழ்வதாலும் எவ்வித பயனும் இருக்கப் போவதில்லை. இயேசுவண்டை வராமல் வெறுமனே நல்லவர்களாக இருப்பதில் எவ்வித பயனும் இல்லை என்பதற்கு நாத்தான்வேல் ஒரு சாட்சி. புறவினத்தைச் சார்ந்த நூற்றுக்கதிபதி கொர்வேலியுவும் இந்த நாத்தான்வேலைப் போல நல்ல வனாக, நற்சாட்சி பெற்றவனாகத்தான் வாழ்ந்தான் (அப். 10 ஆம் அதிகாரம்). ஆயினும், தேவனுடைய பார்வையில் அது போதுமானதாக இல்லை. அவன் இயேசுவின் நற்செய்தியின்படி இரட்சிக்கப்பட வேண்டி யிருந்தது.

ஆகையால், மொத்தத்தில் ஆன்மீக சிந்தையோடு வாழ்பவர்களும், சர்வவல்ல பரலோக தேவனைத் தங்கள் வாழ்வில் ஏற்று வாழ்பவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். தங்கள் பக்தி நிலையில் திருப்திபட்டு, இயேசுவும், அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசமும், அவர் தம் இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கின சபையும் தங்களுக்குத் தேவையில்லை என்று எண்ணாமல், இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று, இரட்சிப்படைந்து, கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட வேண்டும். அப்பொழுது தான் கிறிஸ்துவுடனான மறுமையின் வாழ்வு உறுதிப்படும். குறுக்கு வழி ஏதும் இல்லை.

இவ்வுண்மைகளைப் புரிந்து, நம் பக்தி வாழ்வில் செய்ய வேண்டியதைச் செய்யத் தீர்மானிப்போம்! ஆமென்!!.

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

## காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும், தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும் இணைந்து நடத்தும்

# பதினேழாம் வேதாகம கருத்தரங்கம்

# SEVENTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

**நாள்**

**அக்டோபர் 2,3 - 2014 (வியாழன், வெள்ளி)**

**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் - THEME**

## " கிறிஸ்தவ குடும்பம் "

## " Christian Family "

**வியாழன் : காலை 8:45 மணி - மாலை 4:45 மணி வரை**

**வெள்ளி : காலை 8.45 மணி - மதியம் 1.00 மணி வரை**

**இடம்**

## கிறிஸ்துவின் சபை வளாகம்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

* வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
* தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.


**தொடர்பு முகவரி**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572

# ஏன் விசுவாசம் முக்கியமானது?



**Bro. J.C. சோட்**

விசுவாசம் என்றால் என்ன? அதை விளக்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? இதற்கான விளக்கத்திற்குப் பெரும்பாலும் எபிரெயர் 11:1–ம் வசனத்திற்கு நாம் செல்கிறோம். அங்கே அதன் எழுத்தாளர் இப்படியாகச் சொல்கிறார், *" விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப் படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது "* என்று. இதை உதாரணத்துடன் விளக்குவதற்கு மாபெரும் மனிதர்களாகிய ஆபிரகாம், மோசே, தாவீது, எலிசா இன்னும் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்ததில்லை. ஆனால், அவர்கள் வாழ்ந்ததற்கான உண்மைகளும், ஆதாரங்களும் ஏராளமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தைச் சந்தேகப்பட எனக்கு எவ்வித காரணமும் இல்லை. ஆகையால், இது போன்ற சாட்சியங்களை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், வேத வாக்கியங்களின் மீது எனக்கு இருக்கிற நம்பிக்கையை அடிப்படையாக வைத்து, மேற்கூறப்பட்ட மனிதர்கள் வாழ்ந்தார்கள் என விசுவாசிக்கிறேன். அதுபோலவே கிறிஸ்து, பவுல், பேதுரு மற்றும் பலர் முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என விசுவாசிக்கிறேன். இந்தக் காரியத்தில் பவுல் எழுதினது சரியாகத் தோன்றுகிறது. *" ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் "* (ரோமர் 10:17).

நாம் குருட்டு விசுவாசம் அல்லது வீணான விசுவாசத்தை உடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக; நாம் கர்த்தரையும், அவருடைய சித்தத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளும்படியாக அவர் நம்மிடம் பேசியிருக்கிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்து மறுரூபமானபோது, வானத்திலிருந்து இப்படியாக தேவன் பேசினார். *" இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று "* (மத்தேயு 17:5). எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, *" பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்*

*பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்"* (எபிரெயர் 1:1,2). ஆனால், தேவன் நம்மிடம் எப்படியாகப் பேசுகிறார்? கிறிஸ்துவின் மூலமாகவும், அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும் பேசுகிறார்; கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தைத்தான் யாக்கோபு சுயாதீனப் பிரமாணம் என்று சொல்கிறார் (யாக்கோபு 1:25). பவுல் சொல்லும்போது, *"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குத லுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"* (II தீமோத்தேயு 3:16,17) *என்று கூறியுள்ளார்.*

கர்த்தருடைய வார்த்தை நமக்கு எழுத்து வடிவத்தில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, படித்து, தேவன் இன்று நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என அறிந்து கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. நாம் படிக்க வேண்டும் என்று சொல்கிறார் (II தீமோத்தேயு 2:15) வேத வாக்கியங் களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று இயேசு தாமே சொல்லி யிருக்கிறார் (யோவான் 5:39). ஆனால், நாம் ஏன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்துப் படிக்க வேண்டும்? மறுபடியும், தேவனு டைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கும், அவர் சொல்லியிருக்கிறதை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதற்கும் நாம் வசனங்களைப் படிக்க வேண்டும்.

யாக்கோபு விசுவாசத்தின் முக்கியத்துவத்தை இவ்விதமாக விவாதிக்கிறார். *"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜன மென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி; நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடா விட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லா திருந்தால் தன்னில் தானே செத்தாயிருக்கும். ஒருவன் உனக்கு விசுவாச முண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியை களினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய் அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசு களும் விசுவாசித்து நடுங்குகின்றன. வீணான மனுஷனே கிரியை களில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? நம்முடைய*

*பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான். விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து கிரியை களினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே; அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக் கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்ட போது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததா யிருக்கிறது "* (யாக்கோபு. 2:14-26). இங்கே யாக்கோபு ஆசிரியர் கூறுவது போல், விசுவாசம் உண்டென்று கூறுவது ஒன்று. அப்படி விசுவாசமிருக் கிறதென்பதை நிரூபிப்பது மற்றொன்று. விசுவாசம் மாத்திரம் என்ன செய்ய முடியும்? அதற்கு என்ன மதிப்பு உண்டு? அது செத்த விசுவாசமே. ஆனால், உயிருள்ள விசுவாசம், செயல்படும் மற்றும் கிரியை நடப்பிக்கும் விசுவாசமாகும்.

இங்கே, விசுவாசம் கிரியை உடையதாக இருந்தால், இரட்சிப்பு கிருபையினால் வரவில்லை என்று பொருள்பட்டு விடுமா? பவுல் இதுபற்றி இப்படிச் சொல்கிறார். *"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல "* என்று (எபேசியர் 2:8,9). நிச்சயமாகவே, மனிதனால் போதுமான அளவு நற்கிரியைகள் செய்து, அதனடிப்படையில் இரட்சிக்கப் பட்டு, பரலோகம் செல்ல முடியாது. அதுபோலவே, மனிதன் மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலும் இரட்சிப்படைய முடியாது. இங்கே, அநேகர் ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு கருத்தைப் பவுல் சொல் கிறார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப் பட்டி ருக்கிறோம் என்று. அப்படியானால் அதன் பொருள் என்ன? அதன் பொருள், கிருபை தேவனை அடையாளப்படுத்துகிறது, விசுவாசம் மனிதனை அடையாளப்படுத்துகிறது. தேவன் தம்முடைய கிருபையினாலே இரட்சிப்பை நமக்கு அளிக்கிறார், அந்த இரட்சிப்பை தன்னுடைய விசுவாசத்தைக் கொண்டு ஏற்றுக்கொள்வது மனிதனுடைய கையில்தான் இருக்கிறது. தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தால், நாம் இரட்சிப் படையமுடியாது. மாறாக, தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொண்டால், அவர் நம்மை இரட்சிக்கிறார். ஆனால், நாம் எப்படி அதை ஏற்றுக்கொள்கிறோம்? அவர் சொன்னதை

விசுவாசிப்பதினாலும், நாம் என்ன செய்யும்படியாக சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்வதினாலும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நாம் நம்முடைய பங்காக எதையாவது செய்தால், இரட்சிப்பு கிருபையினால் அல்ல என்று பொருள்பட்டு விடுமா? இல்லை, அப்படி இல்லை. எங்களுடைய இரட்சிப்பை நாங்கள் சம்பாதித்து விட்டோம் என்று சொல்லத்தக்க ரீதியில், நாம் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு சென்று அதை வாசிக்கும் போது, வித்தியாசப்பட்ட மனமாற்ற சம்பவங்கள் அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறதைக் காணமுடியும். ஒவ்வொரு சம்பவத்திலும் சுவிசேஷம் அல்லது கர்த்தருடைய சித்தமானது, இரட்சிப்பு தேவைப்படும் படியான நிலையிலிருந்தவர்களுக்குப் போதிக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தையை கேட்டதின் விளைவாக அவர்கள் விசுவாசிகளானார்கள். ஆனால், அப்படிக் கேட்ட போது அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. மாறாக, அவர்களுடைய விசுவாசத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற தினால் இரட்சிப்படைந்தார்கள். இதை அவர்கள் செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். குறிப்பாக, அப்போஸ்தலர். 2,8,9,10 மற்றும் 16 அதிகாரங்களை வாசியுங்கள். அங்கே விசுவாசத்தினால் மாத்திரம் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமா? இல்லை, அப்படி ஒருவரும் இரட்சிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை. அவர்களுடைய விசுவாசம் அவர்களைக் கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஏவும் அளவுக்கு உறுதியாக இருந்தபடியால் தான் அவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள். இது இன்றும் உண்மையாயிருக்கிறது. ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). ஒருவேளை ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதில்லாதவராக இருந்தால் அவர் இரட்சிக்கப்பட முடியுமா? மாற்கு. 16:16ன்-படி அப்படி முடியவே முடியாது. இந்தக் காரியத்தில் அவர் அவிசுவாசியாகத்தான் கருதப்படுவார். ஒருவர் விசுவாசிக்கவில்லை யென்றால் அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும் போது, நம்மை இரட்சிக்கும் விசுவாசம் இருக்கிறபடியால், ஒவ்வொரு காலத்திலும் அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்வோம்.

உங்களிடத்தில் எவ்வகையான விசுவாசம் இருக்கிறது? உங்கள் விசுவாசம் கிரியை செய்கிற விசுவாசமா? உங்கள் விசுவாசத்தின்படி செயல் பட விருப்பமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப் படிந்தால், அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார்.

பெண்கள் பகுதி

# வீட்டை உருவாக்கும் பெண்

Sis. R. R. NAYAGAM

திருமணமும், வீட்டுவேலையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது. அவைகள் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துள்ளது. அவைகளைப் பிரிக்க முடியாது. நாம் ஒரு மனிதனை விவாகம் பண்ணும்போது, அவனுக்காக ஒரு வீட்டை உருவாக்க வேண்டும் என்ற பொறுப்பு நமக்கு இயல்பாகவே வந்து விடுகிறது. வீட்டை உருவாக்குதல் என்பது உலகத்தில் ஒரு உயர்தரமான வேலை. எந்த ஒரு பெண்ணும் இதைக் குறித்து வெட்கப்படக்கூடாது. இந்த இடத்திற்காக தேவன் அவளைக் குறித்துள்ளார். இங்குதான் அவள் தன் திறமையை வெளிக்கொணர முடியும். இதுதான் அவளுக்கு மேலான இடம்.

வீட்டை உருவாக்குதல் பற்றிப் பேசும்போது சரீரப் பிரகாரமான காரியங்களைப் பேசாமல் விட்டுவிட முடியாது. சரீரப் பிரகாரமானவைகள் நல்ல முறையில் இருந்தால்தான் ஆவிக்குரிய விஷயங்களை அதிக அளவில் உயர்த்திக் கொள்ள முடியும். சரீரப் பிரகாரமானவைகள் என்று பார்க்கும்போது நல்ல, கடினமான, உண்மையான வேலைகள் ஆகும். வீட்டைப் பராமரிப்பதில் முதல் பங்கு எதுவென்றால் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்வதாகும். நம்முடைய வீட்டை பிரகாசமாகவும், அழகாகவும், மகிழ்ச்சி பொங்கும் வகையிலும் வைத்துக்கொள்ளவேண்டும். கணவன்மார்கள் பரபரப்பான தங்கள் வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது , நாம் நம்முடைய வேலைகள் எல்லாம் முடிந்துள்ளதா என்று பார்த்துக் கொண்டு, அவருக்கு சுத்தமான ஒரு தோற்றத்தைக் காட்டின பின்பு அவரோடு சில நேரங்களைச் செலவழிக்க வேண்டும்.

மனைவியானவள் தன் வீட்டை நேர்த்தியாகவும், ரசனையாகவும் வைக்கக் கடமைப்பட்டுள்ளாள். தட்டுமுட்டு சாமான்கள் எவ்வளவு விலை அதிகமானது என்பது இங்கு முக்கியமல்ல, மாறாக அவைகள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டு அதினதின் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் முக்கியம்.

அமைப்பாளர் என்ற வார்த்தை ஒருவேளை நமக்குப் பிடிக்காமல் இருந்தாலும், நல்ல ஒரு வீட்டை உருவாக்க நாம் சிறந்த அமைப்பாளர்களாக இருக்கவேண்டும். திடீரென்று இந்தக் காரியத்தைச் செய்து விட முடியாது. இது

அதிகமான, கடின வேலைகள், திட்டமிடுதல், அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.

ஒரு நல்ல வீட்டை உருவாக்குபவள் வரவு செலவுகள் பார்ப்பதில் சிறந்த அறிவுள்ளவளாக இருக்கவேண்டும். ஒருவேளை இதில்தான் மற்றவற்றைக் காட்டிலும் அதிக சிக்கல்கள் வரும். தன் கணவனின் வருவாய்க்குள் வாழக் கற்றுக்கொள்ளாதவள் முட்டாள் ஸ்திரீயாகவும் தன் கணவனின் சீக்கிர மரணத்திற்குக் காரணமுமாகிறாள். ஆனால் தேவனுடைய திட்டத்தின்படி இந்த விஷயத்தில் நாம் நம் கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும்.

தங்கள் வருமானத்திற்குள்ளாக வாழும் ஓர் மனைவி தன் கணவனுக்கு ஒரு விலைமதிப்புள்ள வெகுமதியாகத் திகழ்கிறாள். தேவனுக்குப் பயப்படும் ஒரு மனைவியின் நேர்மறை குணநலன்களைப் பார்த்தோம். இனி ஒரு மனைவி எப்படி இருக்கக் கூடாதென்று பார்க்கலாம்.

## மனைவி மற்ற காரியங்களுக்குத் தன் கணவனை விட முதலிடம் தரக் கூடாது

ஒரு திருமணத்தின் அடிப்படைக் கருவிகளே கணவனும், மனைவியும் தான். கணவன் தலைவனாகவும், மனைவி அவனுக்குத் துணையாகவும் தான் இருக்கவேண்டுமேயொழிய எந்த ஒரு காரியமும் இந்த உறவுமுறைக்கு கெடுதலாக வந்து தேவனின் திட்டத்தை உருக்குலைந்து போகும்படி செய்து விடக்கூடாது. மனைவியானவள் எந்த ஒரு காரியத்தையும், யாரையும் தன் கணவனுக்கும் மேலாக வைத்து விடக்கூடாது. அப்படி ஒரு செயலாவது, வேறு ஒரு நபராவது கணவன் மனைவி உறவுக்கிடையில் வந்தால் அதைக் கண்டறிந்து உடனே அதைக் களைத்து போட்டு பழைய நிலைக்கு வந்துவிட வேண்டும் ஏனென்றால் தேவதிட்டத்தை நாம் அழித்து விடக்கூடாது.

## மனைவி சந்தேகப்படுகிறவளாக இருக்க கூடாது

கிறிஸ்தவ திருமணங்களில் சந்தேகத்திற்கே இடமிருக்கக்கூடாது. தன் மனைவியை நம்புகிற ஒரு கணவன் அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விடுவாளோ என்று நினைக்கவேண்டிய அவசியமில்லை. தன் கணவனில் அன்புகூருகிற ஒரு மனைவி அவனுடைய வார்த்தையிலோ, செய்கையிலோ, சந்தேகப்படத் தேவையில்லை. சந்தேகம் என்பது ஒற்றுமையின்மை, குழப்பம், துயரம் இவைகளைக் கொண்டுவருவதுடன் கிறிஸ்துவக் குடும்பம் என்ற அந்தஸ்தையே இழக்கச் செய்கிறது. சரியான நம்பிக்கையும் அன்பும், இருக்குமானால் அங்கு சந்தேகத்திற்கே இடமிருக்காது.

## மனைவி குற்றங்கண்டு வசைபாடுகிறவளாக இருக்கக் கூடாது

பல சமயங்களில் மனைவிகளின் வசைபாடுதல், சண்டை சச்சரவு செய்தல் போன்ற காரிங்கள், தன் கணவன் தன்னைத் தேற்றி ஆதரிக்கிற மற்ற கரங்களை அடைக்கலாமாகக் கருதி சென்றுவிட வாய்ப்பு வந்துவிடுகிறது.

ஏனெனில், "சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும் வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம் " (நீதி. 19:13). "மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு " (நீதி. 19:13).

சிம்சோனின் சம்பவத்தில் அந்தப் பெண் தெலீலாள் ஓயாமல் நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும், அவள் திருப்தியடையவில்லை. தெலீலாள், சிம்சோனின் பெலன் எதினால் உண்டாயிருக்கிறது என்று அறிய விரும்பி தொடர்ந்து அவனைத் தொந்தரவு செய்து கொண்டேயிருந்தாள். " இப்படி அவனைத் தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு " (நியாயாதிபதிகள் 16:16) என்றுள்ளது. "அவன் சாகத்தக்கதாய் அவனிடம் வசை பாடிக்கொண்டேயிருந்தாள் ". அவனின் பலம் எதில் இருக்கிறது என்பதைத் தெரியும்வரை நச்சரித்தாள். இது நமக்கும் ஒரு பாடமாகும்.

## மனைவி தன் கணவனின் குடும்பத்தாரை கோபித்துக் கொள்ளக் கூடாது

ஒரு பெண் ஒரு வாலிபனை விவாகம் செய்யும் போது அவனுடைய குடும்பத்தையும் தன்னோடு சேர்த்துக் கொள்ள ஒத்துக் கொள்கிறாள். தன் கணவன் தன்னுடன் எவ்வளவு நெருக்கமாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறாளோ அதேபோல் இவளும் அவர்களுள் ஒருத்தியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தான் நேசித்து, தன் கணவனாக ஏற்றுக்கொண்ட அவர், அவருடைய பெற்றோரின் உதவியில்லாமல் வரவில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தன் கணவனை இப்படி உருவாக்கி தனக்குக் கொடுத்த அந்தப் பெற்றோருக்கு நன்றியாக இருக்க வேண்டும்.

பெண்களின் குணநலன்கள் நீதி. 31ம் அதிகாரத்தில் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளும் எழுந்து அவளைப் பாக்கியவதி என்பார்கள். தன் கணவன் புகழ்வதைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்குக் கிடைக்கும் வெகுமதி உலகில் வேறு எதுவுமில்லை. நம்முடைய நல்ல வாழ்க்கையானது, இந்த உலகில் ஒரு முழுமையான, சௌகரியமான வாழ்விற்காக மட்டு மல்லாது நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கும் ஏதுவாக இருக்கும்.

நாம் நம்முடைய வழிகளை ஆராய்வோம். நம்முடைய குறிக்கோளை ஆராய்வோம். நம்முடைய வீட்டை கட்டிக் கொண்டுள்ளோமா? வீட்டை அழித்துக் கொண்டுள்ளோமா? திருமணமான ஒவ்வொரு பெண்ணும் அவசியம் நீதி. 14:1-ம் வசனத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். " புத்தி யுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கை களினால் அதை இடித்துப் போடுகிறாள் ". நாம் கட்டுகிறோமா? இடிக்கிறோமா? முடிவு நம்முடையது. நாம் என்ன செய்யப் போகிறோம்? "மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான் ". கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான். (நீதி. 18:22). நம்மைப் பார்த்து நம்முடைய கணவனும், பிள்ளைகளும் மகிழ்கிறார்களா?. ❋

வாலிபர் பகுதி

# யோசுவாவிடமிருந்து யோசனைகள்

**Bro. Benny Martin**

" அன்பார்ந்த வாலிப வாசகர்களுக்கு வானவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வருடத்திற்கு ஒரு முறை வரும் வசந்த காலம் போல வாழ்க்கையில் ஒருமுறை வரும் வாலிபப்பருவம் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளுக்காக வலம் வருகிறது. வெற்றி என்பதற்கான பொருளை பல்வேறுபட்ட மக்கள் பலவிதமாக விளக்குகிறார்கள். சிலருக்கு வெற்றி என்பது செல்வங்களைச் சேர்ப்பதாய் இருக்கிறது. சிலர் நல்ல உறவுகளை தேடிக் கண்டுபிடித்து மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதை வெற்றியாகக் கருதுவார்கள். ஒருவர் பல்வேறுபட்ட நிலைகளில் வெற்றிக் கனியைப் பறித்தாலும், தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்ளவில்லையென்றால் பரிதாபத்திற்குரியவராகிறார். வேறு விதமாகச் சொன்னால், ஒருவர் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36). அப்படிப்பட்ட மனிதன் வேதாகமத்தின் அடிப்படையில் வெற்றி பெற்ற மனிதனாகக் கருதப்படமாட்டான். வெற்றி என்பதற்கான வேதாகமத்தின் அளவுகோல் அலாதியானது. அதே நேரத்தில் உலகத்தின் பார்வையிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. வேதாகம வெற்றிக்கு மிகச் சிறந்த உதாரணம் யோசுவா. இந்த யோசுவாவின் வெற்றியின் இரகசியத்தைப் பற்றிய பறவைப் பார்வை இதோ.

## I யோசுவா தன் வாலிப வயதில் தேவனைத் தேடினார் :

பொதுவாக உலகத்தில் நாம் பார்க்கும்போது பலர் வாலிப வயதில் உலகத்திற்காக வாழ்ந்து விட்டு, வயதான காலத்தில் தேவனுக்காக வாழ வேண்டும் என்று வாஞ்சிக்கின்றனர். ஆனால், இந்த யோசுவா வாலிப வயதில் தேவனைத் தேடியிருக்கிறார். யோசுவா தேவனுடைய பிள்ளைகளை இரட்சிப்பதற்காக தன் வாலிபப்பிராயத்தை தேவனுக்காக அர்ப்பணித்தார். யோசுவா என்கிற பெயரின் அர்த்தமே இரட்சகன் என்பதாகும். நம்மில் பலருக்கு இந்த யோசுவாவை மோசேயின் மரணத்திற்குப் பிறகு இஸ்ரவேல் ஜனங்களை அந்த கானான் தேசத்துக்குள் வழிநடத்தின ஒருவராகத்தான் தெரியும். இன்னும்

சிலருக்கு இந்த யோசுவாவை கானான் தேசத்திற்குள் வேவு பார்க்கச் சென்ற பன்னிரெண்டு வேவுகாரரில் ஒருவராகவும், அத்தேசத்தைக் குறித்து நற்செய்தி கொண்டு வந்த இருவரில் ஒருவராகவும் தான் தெரியும். யாத்திராகமம் 33:11-ல் யோசுவா ஒரு வாலிபனாக குறிப்பிடப்பட்டிருக்கிறார். முதன் முதலாக வேதாகமத்தில் யோசுவா என்னும் பெயர் யாத். 17:9-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கே அவர் இஸ்ரவேலர்களுக்கும், அமலேக்கியர்களுக்கும் இடையே நடந்த யுத்தத்தில் பங்கெடுத்து அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக் கருக்கினாலே முறியடித்தார். இந்த யோசுவா சீனாய்ப் பர்வதத்தில் தேவன் மோசேக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த போது மோசேயோடு மலையில் ஏறும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார். (யாத். 24:13; 32:17). இவர் வாலிபப் பிராயத்திலே தன் சிருஷ்டிகரை நினைத்தபடியாலும், தேவனுக்கடுத்த காரியங்களில் வைராக்கியம் கொண்டதாலும், தேவன் இவரை இஸ்ரவேல் ஜனங்களைக் கானான் தேசத்திற்குள் வழி நடத்தி, அவர்கள் கோத்திரங்களுடைய பங்குகளின்படியே சுதந்திரமாகக் கொடுத்தார் (யோசுவா 11:23). பிரியமானவர்களே! யோசுவா எல்லாவிதத்திலும் வெற்றியுள்ள மனித ராகவே வாழ்ந்திருக்கிறார். எனவே நாமும் வாலிபப் பிராயத்தில் தேவனைத் தேடுவோமா?.

## II யோசுவா சரியான மாதிரியைத் தெரிந்தெடுத்தார் :

மோசே தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனாவும், ஒரு மாபெரும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார் (எண்ணாகமம் 12:3; உபாகமம் 34:10). ஒரு தலைவன் என்கிற நிலையில் யோசுவா வெற்றி பெற வேண்டும் என்றால் மோசேயின் மாதிரியைப் பின்பற்ற வேண்டியதாயிருந்தது. இதை யோசுவா அசத்தலாகச் செய்தார். இவருடைய பெயரைத் தாங்கி வரும் புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் இவர் கர்த்தருடைய ஊழியக்காரன் என்னும் பெயரைப் பெற்றார் (யோசுவா 24:29). நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் (பேதுரு 2:21) இவ்வுலகில் வெற்றியுள்ள வாழ்க்கையை நமதாக்கிக் கொள்ள முடியும். இன்றைய நாட்களில் பல வாலிபர்கள் திரைப்பட நட்சத்திரங்களை, விளையாட்டு வீரர்களை, அரசியல் தலைவர்களை தாங்கள் மாதிரிகளாகக் கொண்டு அவர்களைப் போல் பேசவும், நடக்கவும் முயற்சிக்கின்றனர். ஆனால், அந்த பிரபலங்கள் இந்த வாலிபர்களின் நலனுக்காக ஏதாவது செய்கிறார்களா? இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகப் பாடுகள் பட்டார். இரத்தம் சிந்தி தம் ஜீவனையே விட்டார். நமக்காக தம் ஜீவனை விட்டவருக்காக நாம் நம் ஜீவனைக் கொடுக்க வேண்டாமா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று பிலி. 2:5-ல் நாம் வாசிக்கிறோம். இன்று உலகில்

நடக்கும் எல்லா சண்டைகளுக்கும், யுத்தங்களுக்கும் காரணம் ஒவ்வொருவரிடத்திலும் கிறிஸ்துவின் சிந்தையில்லாததுதான்.

### III யோசுவா சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், தேவனிடத்தில் நம்பிக்கை உடையவராக இருந்தார் :

யோசுவா மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. மோசே செய்து முடிக்க வேண்டிய பணி இவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அந்த மிகப்பெரிய சாதனையை எப்படி யோசுவாவால் நிகழ்த்த முடிந்தது? அவர் தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை வைத்து அந்த பொறுப்பை தேவனிடமே விட்டு விட்டார். நாமும் கூட தேவ காரியங்களில் ஈடுபடும் போது சூழ்நிலைகள் நமக்கெதிராக மாறினால் நாம் துவண்டு விடாமல் தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொண்டால் வெற்றி நம் வசப்படும். தேவன் எவைகளையெல்லாம் நாம் செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறாரோ அவைகளெல்லாம் செய்ய முடியாதவைகளல்ல (பிலிப்பியர் 4:13). தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார் (ரோமர் 8:31). எந்தத் துறையிலும் வெற்றி என்பது தைரியத்துடன் ஆரம்பமாகிறது. புதிய எண்ணங்களை முயற்சிக்க, புதிய திட்டங்களை செயல்படுத்த தைரியம் அவசியமாகிறது. யோசுவாவுக்கு முன்பாக இமாலயப் பணி வைக்கப்பட்டிருந்தது (யோசுவா 1:2-6). அவர் தேவனுடைய சத்துருக்களை முறியடித்து நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யப் பணிக்கப்பட்டிருந்தார். தேவனுக்காக நிற்பதற்குத் தைரியம் தேவை. இந்தத் தைரியம் யோசுவாவுக்கு தேவன், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்ன வார்த்தைகளாலே உண்டானது (யோசுவா 1:5). தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோத்தேயு 1:7). ஆதலால், நாம் தேவனுக்காகத் தைரியமாக எழும்பி பிரகாசிக்க முடியும்.

பிரியமான வாலிபக் கண்மணிகளே! யோசுவாவைத் தேவன் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தி அந்த இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குள் வழி நடத்த வைத்ததற்கு தேவன் அவரிடம் கண்ட சில பண்புகளை நாம் பார்த்தோம். யோசுவா தன் வாலிப வயதில் தேவனைத் தேடினதாலும், தன்னுடைய முன்னோடியாகத் திகழ்ந்த தேவதாசனாகிய மோசேயை தன் மாதிரியாகக் கொண்டு மோசேயின் பிரமாணத்தை விட்டு வலது இடது புறம் விலகாதிருந்ததினாலும், சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் தேவனிடத்தில் நம்பிக்கை உடையவராக இருந்தபடியால் சத்துருக்களை முறியடித்து மிகப்பெரிய வெற்றி பெற்றார். நாமும் சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் வெற்றி பெறவும், ஆவிக்குரிய வாழ்வில் வெற்றி பெறவும் தேவதாசனாகிய யோசுவாவின் பண்புகளைப் பெற்றுக்கொள்வோம். அப்பண்புகளை நம்முடையதாக்கிக் கொண்டால் வெற்றி நிச்சயம் நம் வசமாகும்.

சிறுவர் பகுதி

# நீங்கள் எப்படி வளர வேண்டும்?

**Bro. ABEL R. NAYAGAM**

" எனக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைளே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் சிறுவர் பகுதி வாயிலாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஒவ்வொரு மாதமும் நீங்கள் படிக்கும் காரியங்கள் உங்களுக்குப் பயனுள்ளதாயிருக்கும் என நம்புகிறேன். காலாண்டுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கும் அப்படித்தானே? நன்றாகப் படிக்கிறீர்களா? சரி, உங்கள் நேரத்தை வீணாக்காமல் நேரடியாக நாம் பாடத்திற்குச் செல்வோம். வாருங்கள்!

வளருகின்ற பருவத்தில் இருக்கும் நீங்கள், யாரைப் போல இருக்க வேண்டும் என்பது தான் இந்த மாதத்திற்கான பாடம். பெரியவர்களானாலும், உங்களைப் போல சிறியவர்களானாலும் எந்த விஷயத்திற்கும் சிறந்த உதாரண மாக எடுத்துக் கொள்ளக்கூடிய குணங்களைக் கொண்ட ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்து தான். சிறியவர்களாகிய நமக்கு அவர் எப்படி மாதிரியாக இருக்கிறார்? வாருங்கள் பார்ப்போம்.

இயேசு சிறுவயதில் எப்படியெல்லாம் இருந்தார் என்று முழுமையாக நமக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லை. ஆனால், அவர் பூமியில் தனக்கு இருந்த பெற்றோருக்கும், பரலோகத்தில் இருந்த தன் பிதாவிற்கும் " கீழ்ப்படிந்த " ஒரு பிள்ளையாக இருந்தார்.

லூக். 2:40-ல் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர் மேல் இருந்தது.

51-ஆம் வசனத்தில், பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய் நாசரேத் தூரில் சேர்ந்து. அவர்களுக்குக் " கீழ்ப்படிந்திருந்தார் ".

இயேசுவானவர் சிறுவயதிலிருந்தே முழுமையான வாழ்க்கை வாழ்ந்தார்.

அவர் ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்தார்.

தேவனோடு ஒரு உறவை ஏற்படுத்திக் கொண்டு வளர்ந்தார்.

மற்ற மனிதர் அனைவரோடும் சேர்ந்து யாரையும் பகைக்காமல் மனுஷர் தயவில் வளர்ந்தார் (லூக்கா 2:52).

லூக்கா 4:16-ல் தம்முடைய " வழக்கத்தின்படியே " ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.

இந்த வசனம் அவர் வழக்கத்தின்படி ஜெப ஆலயத்திற்குப் போனார் என்று கூறுகிறது. அப்படியென்றால் சிறுவயதிலிருந்தே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திற்குப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நீங்களும், வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைக்குப் போவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறீர்களா?

நமதாண்டவர் இயேசுவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றி நமக்கு அதிகம் எழுதிக் கொடுக்கப்படவில்லை. ஆனால், எழுதியிருப்பவைகளே போதுமென்று நினைக்கிறேன். அப்படித்தானே?

நீங்களும் இயேசுவை மாதிரியாக வைத்து, வளருங்கள். அப்பொழுது உங்கள் பெற்றோரும், உங்களைக் காண்கிற மற்ற மனிதர்களும் உங்களைப் பாராட்டுவார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படும். தேவனும் உங்கள் மீது பிரியமாயிருப்பார். எப்படித் தேவனுடைய கிருபை இயேசுவின் மீது இருந்ததோ, அப்படியே உங்கள் மீதும் இருக்கும். சரியா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக !!!

❄

மருத்துவ ஆலோசனை

## இரத்த அழுத்தம் (HYPERTENSION)

- இரத்தம் அழுத்தம் உள்ளவர்கள், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மருந்தை தவறாமல் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வரவேண்டும்.
- அநேகர் இது காய்ச்சல், தலைவலியைப் போன்ற ஒரு வியாதி என்று நினைத்து ஒரு வாரமோ அல்லது ஒரு மாதமோ மருந்துகளை எடுத்து விட்டு மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் நிறுத்திவிடுகிறார்கள். இப்படிச் செய்வது தவறு.
- உணவில் உப்பு (சோடியம்) அளவாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலும் சிலர், மருத்துவர் சொல்லிவிட்டார் என்பதற்காக உப்பே இல்லாமல் சாப்பிடுவார்கள். அதுவும் தவறு. நமது நரம்பு மண்டலம் சீராக வேலை செய்ய சோடியம் தேவை. எனவே, அளவாக உப்பை எடுத்துக் கொள்ளவேண்டும்.
- குறைந்தது 3 மாதத்திற்கு ஒருமுறை BP-Check செய்து வர வேண்டும். நீங்கள் எடுக்கும் மருந்தின் தாக்கம், சரியாக உள்ளதா அல்லது குறைவாக/ அதிகமாக உள்ளதா என்று கண்டறிந்து அதற்கேற்றபடி Dosage Change செய்ய வேண்டும்.
- தினந்தோறும் அல்லது வாரம் 5 நாட்கள் உடற்பயிற்சி செய்வது அவசியம். **கவனிக்கவும் : உடற்பயிற்சி மருந்திற்கு மாற்று அல்ல**
- தலைவலி, (குறிப்பாக கழுத்துப்பகுதியில், பின் தலையில்) இருந்தாலோ அல்லது தலைசுற்றல் இருந்தாலோ, உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.
- இந்த இரத்த அழுத்த வியாதியைக் கவனிக்கத் தவறினால் இருதயம், சிறுநீரகம் ஆகிய இவ்விரண்டு உறுப்புகளும் செயல் இழக்க வாய்ப்பு உண்டு.
- உணவில் இறைச்சியைக் குறைத்துக் கொள்வது நல்லது.
- BP அளவு 140/80 என்ற அளவிற்குள் வைத்து கொள்வது நல்லது. (இது ஏற்கெனவே BP வியாதி உள்ளவர்களுக்கு).

Dr. ஏபில் நாயகம்,
CMC வேலூர்.



Write to us for any Doubts / Clarification....

# நாயைக் காதைப் பிடித்து இழுப்பவன்

**Bro. K. பாண்டியன்**

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும் சமாதானமும் உண்டாவதாக. உலகில் எவ்வளவு தான் பழமொழிகள் இருந்தாலும் வேதத்தில் காணப்படும் பழமொழிகள் (நீதிமொழிகள்) பன் மடங்கு உயர்ந்ததும் மிக ஆச்சரியமானதும் ஆகும். அவைகளில் ஒவ்வொன்றும், நினைத்துப் பார்க்கும் போது முதலில் சிரிப்பு வந்தாலும் அதின் ஆழமான கருத்து அனைவரும் கவனிக்கத்தக்கது. வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்து இழுக்கிற வனைப் போலிருக்கிறான் (நீதி. 26:17). நம் வாழ்க்கைப் பாதையிலும் நாம் செய்யும் செயல்களும், பேசும் பேச்சுக்களும் நம்மை சங்கடத்திற்குள் தள்ளி விட்டு, அநேக முறை இந்தச் சூழ்நிலையைக் கடந்து வருகிறோம். அதைத் தவிர்த்து தேவனுக்கு உகந்தவர்களாக வாழ வேதத்திலிருந்து சில ஆலோசனைகளைப் பார்ப்போம்.

முதலாவதாக, பலசாலி சிம்சோன் தேவனுடைய நோக்கத்தை மறந்து பெண்சிநேகிதம் கொண்டு தன் பலத்தை இழந்து சிறைச் சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டு மாவாட்டும் வேலை செய்யுமளவுக்கு சிறுமைப்படுத்தப்பட்டான். இன்றைய வாலிபர்கள் அநேகர் கேர்ள் பிரண்ட் என்ற மாயையில் சிக்கி தங்கள் வாழ்க்கைப் பாதையில் முன்னேற முடியாத சிம்சோனைப் போல இருக்கிறார்கள் (நியா.16:4) வேத வாக்கியத் தின்படி உலக சிநேகிதங்கள் தேவனுக்கு விரோதமான பகை (யாக் 4:4) என்பதை அவர்கள் நினைவு வைக்க வேண்டும். கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருக்கும் தேவப் பிள்ளைகள் பேலியாளின் பிள்ளைகளாக மாற தேவன் விரும்பவில்லை. எனவே, வாலிபப்பிராயத்தில் எதிர்கால வாழ்க்கை சிக்கல் இல்லாமல் அமைய பெற்றோரைக் கனம் பண்ணி அவர்கள் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்க வேதம் எச்சரிக்கின்றது. உன் தகப்பன் புத்தியைக் கேள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே (நீதி 1:8).

அடுத்து தாவீது ராஜா தனது ஆட்சியின் ஆரம்ப காலக்கட்டத்தில் செய்த ஒரு காரியம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாய் இருந்தது. பிறன் மனைவியாகிய பத்சேபாளிடம் தவறு செய்தான். பத்துக் கட்டளையில் விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்ற கட்டளை மாத்திரம் அல்ல, பிறன் மனைவியை இச்சியாதிருப்பாயாக என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. ஒரு பெண்ணை முறையாக மணந்து அவளுடன் குடும்பம் நடத்த முடியாத கோழைகளே, பிறர் மனைவியை இச்சித்து

சமுதாயத்தில் அநேகக் குடும்ப சிதைவுகளுக்குக் காரணமாய் இருக்கிறதை நாம் அன்றாடம் பத்திரிக்கைகளில் காண்கிறோம். தவறு நடக்கக் காரணமாக ஒருவேளை, பெண்களாக இருந்தால் அவர்களைப் பற்றியும் அவர்கள் நடக்கை பற்றியும் வேதம் தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கின்றது (நீதி 5ம் 6ம் அதிகாரம்) இந்த விஷயத்தில் பேச்சும் பார்வையும் ஒருவன் கெடுப்பதால் இச்சையோடு பாராதே என்று இயேசுவானவர் எச்சரிப்பதை நினைவு கொள்ளுங்கள். மேலும் குடிப்பழக்கம் கூட இப்படிப்பட்ட பாவங் களுக்குக் காரணமாகிறது (நீதி. 23:33). ஏன் நாயைக் காதைப்பிடித்து இழுக்கக்கூடாது என்று யாரும் கேள்வி கேட்க முடியாது.

அதன் விளைவு நாம் அனைவரும் அறிந்ததே. கடிவாங்கி, ஊசி போடயாரும் எப்படி விரும்புவதில்லையோ, அதைப்போல இந்த ஆலோசனைகளை நாம் ஏற்று நடப்பதே சிறந்தது. பிறர் சொத்துக்கு ஆசைப்பட்டு முடிவில் துர்மரணத்திற்கு ஆளான இஸ்ரயேல் ராஜா ஆகாப் என்பவனையும் நாம் அறிவோம். பெரிய தேசத்திற்கு ராஜாவாயிருந்ததும் ஒரு எளிய மனிதனான நாபோத் என்பவனுடைய சிறிய திராட்சைத் தோட்டத்திற்கு ஆசைப்பட்டதால் அவன் ரத்தத்தை நாய்கள் நக்கினது (1 ராஜா 22:38). பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக என்று பேசின பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு அப்போஸ்தலர் உபதேசத்தில் உண்ணவும், உடுக்கவும் உண்டாயிருந்தால் அது போதும் என்று இருக்கக்கடவோம் என்று சொல்கிறது. இல்லாவிடில் எல்லாத்தீமைக்கும் வேராகிய மூலக் காரணமான பண ஆசை அவனை கொன்றுவிடும்.

ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமல் போனால் அது பாவம் என்று யாக்கோபு சொல்கிறார் அதைப்போல் மதிக்க வேண்டியவர்களை நாம் மதியாமல் இருக்கும்போது அது கிறிஸ்தவனுக்கு அடாத செயலாய் இருக்கின்றது. கோபால் என்கிற தமிழ் பெயரைப்போல் இஸ்ர யேல் மக்களிடையே நாபால் என்கிற ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனுடைய மேய்ப்பர்களுக்கு, தாவீதும் அவனுடன் இருந்த ஆட்களும் உதவியாய் இருந்தார்கள். தாவீது சவுலுக்கு மறைந்து வாழ்ந்த அந்தக் காலத்தில் அவனுக்கும், அவனுடன் இருந்தவர்களுக்கும் உணவு வேண்டி தாவீது நாபாலிடத்திற்கு ஆள் அனுப்பினான். ஆனால் நாபால் அவர்களையும் தாவீதையும் தரக்குறைரவாகப் பேசி திருப்பி அனுப்பி னான் (1 சாமு 25:11) இங்கே நாம் ஒரு விஷயம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். தாவீது இஸ்ரயேல் ஜனத்தின் விரோதியான கோலியாத்தை வீழ்த்தியபோதே ஜனங்கள், சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடிய பாடல் ஏறக்குறைய இன்றைய நாளில் நாம் எல்லாரும் பாடுகிற இயேசுவின் நாமம், இனி தான நாமம் என்ற பாடலின் அளவுக்குப் புகழ் பெற்ற ஒன்றாயிருந்தது. ஆனால், அந்த புத்தியீனன் நாபால் தாவீதை அவமதித்தான். பிற்பாடு உண்மை அறிந்த போது அவன்

இருதயம் நின்று அவன் கல்லைப் போல் ஆனான் (1 சாமு 25:37) எனக்கன்பானவர்களே, வேதம் மற்றவரைக் கனம் பண்ணுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பெற்றோர், முதியோர், மேலான அதிகாரமுள்ளவர்கள், ஆட்சியில் இருப்பவர்கள் மற்றும் கணவன் மனைவிக்குள்ளும் ஒருவரையொருவர் கனம் பண்ண வேண்டும். அதேபோல் தேவனுடைய பிள்ளைகள் ஒருவரையொருவர் கனம் செய்தலும் விசேஷமாக ஊழியர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும். சிலர் முதன்மையாய் இருக்க விரும்பி தியோத்திரேப்புவைப் போல செயல்பட்டுத் தாங்கள் கெடுவதுமல்லாமல் தேவன் கிருபையாய் இரட்சித்து சபைக்குக் கொண்டு வந்த மற்ற ஆத்துமாக்களும் வழி விலகக்காரணமாயிருக்கிறார்கள். மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? (ரோமர் 14:4) என்று வேதம் கேட்பதை அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.

நம் வாழ்க்கைப்பாதை ஆண்டவர் இயேசு மூலம் வகுக்கப் பட்டுள்ளது. நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் நாம் பொறுமையாய் ஓட வேண்டியுள்ளது. உத்தமமாய் நடப்போன் பத்திரமாய் நடக்கிறான் (நீதி. 10:9). எனவே, உலக சிநேகிதங்களுக்கு முக்கியத்துவம் கொடாமல், பொருளாசைக்கு விலகி, கற்புள்ள நடக்கையைப் பின்பற்றி, கனம் பண்ணுவதில் முந்திக் கொண்டு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடருவோம். இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

| மரித்தும் பிழைத்தவர்கள் | உயிர்ப்பித்தவர் |
|---|---|
| இரட்சகராகிய இயேசு கிறிஸ்து | பிதாவாகிய தேவன் (அப். 2:32) |
| சூனேமியாளின் குமாரன் | எலிசா (2 ராஜா 4:35) |
| நாயீன் ஊர் விதவையின் மகன் | இயேசு கிறிஸ்து (லூக். 7:15) |
| ஜெப ஆலயத் தலைவனுடைய மகள் | இயேசு கிறிஸ்து (லூக் 8:55) |
| மரியாள், மார்த்தாளின் சகோதரன் லாசரு | இயேசு கிறிஸ்து (யோவான் 11:44) |
| தொற்காள் என்னும் சீஷி | அப்போஸ்தலன் பேதுரு (அப். 9:40) |
| ஐத்திகு என்னும் வாலிபன் | அப்போஸ்தலன் பவுல் (அப். 20:12) |

(ரோமர் 6:8 : .......கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம்.....)

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 43 இராஜ்யத்தின் பந்தி

**Bro. K. பாஸ்கர்**

" பந்திக்கு முந்து படைக்குப் பிந்து " என்கின்ற பழமொழியைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அதுபோல இராஜ்யத்தின் பந்திக்கு முந்திக் கொள்ள வேண்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிவோமாக! இராஜ் யத்தின் பந்தி என்ற கட்டுரையை இம்மாதத்தில் அறிந்து கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபையைத் தெரிந்து கொள்வோமாக!!

### I பெரிய விருந்து

பூமிக்குரிய எல்லாக் காரியங்களையும் புறக்கணித்துவிட்டு கிறிஸ்துவின் சபைக்கு அல்லது அவருடைய இராஜ்யத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இராஜ்யத்தின் பந்தி பற்றிய போதனையை உவமையாகச் சொல்லுகின்றார் (மத்தேயு 22:1,14). பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக் கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கல்யாணத்திற்கு வரச் சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான் அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து நீங்கள் போய் இதோ என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக் களும் அடிக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டை பண்ணினார்கள் (மத்தேயு 22:2,5).

விருந்துகளில் பலவகை கேள்விப்பட்டிருக்கின்றோம். இங்கே சொல்லப் பட்ட விருந்து ராஜ விருந்து, ராஜ உபசரிப்பும் உண்டு, ராஜ மரியாதையும் உண்டு. பண்டைய யூத வழக்கத்தின்படி ஒரு விருந்து நடத்தப்படுமேயானால் முதலில் தேதி மட்டுமே குறிக்கப்பட்டு அழைப்பு விடுக்கப்படும் விருந்து நாளில் அந்த விருந்து நடைபெறும் இடம், குறிப்பிட்ட நேரம் இவைகள் குறிக்கப்பட்டு அழைக்கப்படும். அதுபோல இந்த உவமையில் சொல்லப்பட்டுள்ளது. பெரிய விருந்து ஆயத்தம் பண்ணப்பட்டது. இந்த உவமையில் இயேசு கிறிஸ்து எல்லாக் காரியங்களையும் விட கிறிஸ்துவின் சபைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார்.

### II பெரும் அழைப்பு...

இராஜ விருந்திற்கு வரும்படி அழைக்கப்பட்டவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டது. அழைக்கப்பட்டவர்கள் யூதர்களாயிருந்தார்கள். முதலில் அழைப்பு யூதருக்கு (அப். 13:46) தேவன் நம்மைத் தெரிந்து கொள்ள கிறிஸ்துவின் சுவிசேஷம் மூலமாய் இன்று அழைக்கிறார் (ரோமர் 1:15; 2 தெச. 2:14) இந்த ராஜ விருந்து கிறிஸ்துவின் சபையில் நடைபெறுகிறது. இதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா! நாம் நம்முடைய காரியங்களில் ஆயத்தமா யிருக்கின்றோம். ஆனால், தேவ காரியங்களில் ஆயத்தமாயிருப்பதில்லை;

நம்முடைய வாழ்வில் மரணம் வரை கூட இருப்பது இயேசு கிறிஸ்துவே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். (மத்தேயு 28:20) எனவே, இந்த பெரும் அழைப்புக்கு முதலிடம் கொடுக்க முன் வருவோம். பந்திக்கு முந்துவோம்! இயேசு கிறிஸ்துவோடு பெரிய விருந்தில் பங்கு பெறுவோம். இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் இயேசு (மத்தேயு 18:20). சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக ஆமென் (எபே. 3:21). தேவன் கிறிஸ்துவின் சபையிலே மகிமைப்படுகின்றார். அந்த சபையை அல்லது பெரிய விருந்தைத் தேடுவோம். வாழ்க்கையில் திருமணம் செய்ய பெண்ணை விவாகம் பண்ணத் தேடுகிறோம். பின்பு முன்னேறுவதற்கான வழிகளைத் தேடுகிறோம். முடிவில் மரணம் நேரிடுகிறது. தேடுகின்ற காரியங்கள் நின்று விடுகிறது. எனவே, மரணத்திற்குப் பின்பு வாழ்வு தரும் ஆவிக்குரிய காரியங் களைத் தேடுவோம்! அப்பொழுதுதான் நம் வாழ்க்கைக்கு அர்த்தமிருக்கும். வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து அழைக்கிறார். அந்த அழைப்பை பெரும் அழைப்பாக ஏற்றுக் கொள்வோமாக!.

## III நியாயமற்ற சாக்குப் போக்குகள்

விருந்து ஆயத்தம் பண்ணப்பட்டு அழைப்பு விடுத்தபோது அழைக்கப் பட்டவர்கள் சற்றும் தயங்காமல் பட்டென்று மறுப்புத் தெரிவித்து, நியாயமற்ற சாக்குப் போக்குகளைக் கூறினார்கள். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டை பண்ணி ஒருவன் வயலுக்கும், ஒருவன் வியாபாரத்துக்கும் போய் விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து அவமானப்படுத்தி கொலை செய்தார்கள் (மத்தேயு 22:5,6).

பூமிக்குரிய காரியங்களைக் கூறிவிட்டு சென்றிருக்கலாம். சாக்குப் போக்குகளுக்கு உண்மைக் காரணங்கள் எதுவுமில்லை. எப்படியிருந்தாலும் ஆவிக்குரிய காரியங்களை விட பூமிக்குரிய காரியங்கள் மேலானது இல்லை! பூமிக்குரிய வேலை இருந்தாலும் ஆவிக்குரியக் காரியங்களைத் தான் அதிகமாய் நேசிக்க வேண்டும்! இயேசு கூறுகிறார் தகப்பனையாவது, தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; என்றார் (மத்தேயு 10:38,39). சக்குப் போக்குகளை அதிகமாய் நேசிக்கக்கூடாது, அழைப்பைப் பெற்றுக் கொண்டவர் ஆண்டவர் இயேசுவை அதிகமாய் நேசிக்க வேண்டும். அதாவது உண்மையான கிறிஸ்துவின் உபதேசத்தை மனப்பூரணமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதைவிட்டு வீணான சாக்குப்போக்குகளையும், ஊழியரை எதிர்ப்பதும், சண்டை போடுவதும் கூடாது. இவைகள் யாவும் நியாயமானவைகளல்ல! எனவே, கிறிஸ்துவின் உபதேசப்படி செயல்படும் கிறிஸ்துவின் சபையை ஏற்றுக் கொண்டு உண்மைக் கிறிஸ்தவர்களாகச் செயல்படுவோம்! விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் நியாயமற்ற சாக்குப் போக்குகளை சொன்னது போல நாமும் சொல்லாமல் இருப்போமாக!

# கிறிஸ்தவ திருமணம்

கிறிஸ்தவர்களின் திருமணம் மிக அழகானது. இரண்டு பேரும் நம்பிக்கையில், விருப்பத்தில், பின்பற்றுவதில், பக்தி காரியங்களைச் செயல் படுத்துவதில் ஒன்றாயிருக்கிறார்கள்.

இரண்டு பேரும் ஒரே எஜமானுடைய ஊழியக்காரர்களாயிருக்கிறார்கள். மாம்சத்திலும், ஆவியிலும் எதுவும் அவர்களைப் பிரிப்பதில்லை.

ஒரே மாம்சத்தின் இரண்டு பங்காயிருக்கிறார்கள். எங்கே ஒரே சரீரம் உண்டோ அங்கே ஒரே ஆவி உண்டு.



அவர்கள் இணைந்து ஜெபிக் கிறார்கள், இணைந்து ஆராதிக்கிறார்கள். இணைந்து ஒருவருக்கொருவர் போதிக் கிறார்கள். இணைந்து ஒருவரை யொருவர் பெலப்படுத்துகிறார்கள்.

ஒருவருக்கொருவர் இசைந்து ஆராதனைக்குச் செல்லுகிறார்கள். இணைந்து சோதனைகளை எதிர்கொள் கிறார்கள். ஒருவருக்கொருவர் ஆறுதலளிக்கிறார்கள்.

இரண்டு பேருக்கிடையே எந்த இரகசியமும் இல்லை; ஒருவருடைய இருதயத்துக்கு ஒருவர் துக்கத்தை வருவித்துக்கொள்வதில்லை.

பிணியாளிகளை விசாரித்து உதவுவதில் பிரச்சினை இல்லை; தேவையிலிருப் போருக்குக் கொடுப்பதில் கவலையுமில்லை.

சங்கீதங்களையும், ஞானப்பாட்டுகளையும் சேர்ந்துபாடுகிறார்கள். இதைக் கேட்கும் கிறிஸ்து மகிழ்ச்சி அடைகிறார். அவர்களுக்கு சமாதானத்தை அளிக்கிறார்.

எங்கே இரண்டு பேர் இசைந்திருக்கிறார்களோ, அங்கே அவர் இருக்கிறார். அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே தீமை இருக்காது.

# உங்கள் சிந்தனை...

## Bro. K.M. பிலிப்

தேவனுடைய படைப்பில் எந்த உயிரினங்களுக்கும் இல்லாத அநேக சிறப்புகள் மனிதனுக்கு உண்டு. அதில் சிறப்பாகக் கருதப்படுவதில் ஒன்று சிந்திக்கும் ஆற்றல். சிந்தனையே மனிதனை ஆளுகிறது; அடையாளப்படுத்து கிறது. நல்லதைச் சிந்திக்கும் அதே மனம் தான் கெட்டதையும் சிந்திக்கிறது. நல்லதைச் சிந்திக்கும் பொழுது நல்லவனாகவும், கெட்டதைச் சிந்திக்கும் பொழுது கெட்டவனகவும் அடையாளப்படுத்தப்படுகிறான். இதைத்தான் ஞானி " அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் " என்கிறார் (நீதி. 23:7). பரிசுத்த ஆவியானவரும் இதை வலியுறுத்துகிறார் ". "சுத்தமுள்ளவனுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும். அசுத்தமுள்ளவர்களுக்கும், அவ்விசுவாசிகளுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது " (தீத்து. 1:15). ஆகவே தான், "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் " என்று வேதம் ஆலோசனை கொடுக்கிறது (நீதி. 4:23). " எப்படியெனில் இருதயத்திற்குள்ளி ருந்து, பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தூஷனங்களும், புறப்பட்டு வரும். இவைகளே மனிதனைத் தீட்டுப்படுத்தும் " (மத். 15:19,20). நம் இருதயத்தை நிரப்பியிருந்த இப்பொல்லாத சிந்தனைகள் நாம் சுவிசேஷத் தைக் கேட்டு மனந்திரும்பும் போது எடுத்துப்போடப்படுகிறது. கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுகிறது. (வெளி. 1:6).

இப்படி சுத்தமாக்கப்பட்ட இருதயம், பரிசுத்தவான், நீதிமான், ராஜரீகமான ஆசாரியக் கூட்டம், தேவ ஜனம், விசுவாசி, சீஷன், கிறிஸ்தவன் என்ற பட்டங்களால் ஜோடிக்கப்படுகிறது. இப்படி ஜோடிக்கப்பட்ட இருதயம் காலியாய் இருக்குமானால் என்ன நடக்குமென்பதை இயேசு ஒரு உவமையின் மூலம் நம்மை எச்சரிக்கிறார். " அசுத்த ஆவி ஒரு மனிதனை விட்டுப் புறப்படும் போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடை யாமல் நான் விட்டு வந்த என் வீட்டிற்குத் திரும்பி போவேன் என்று சொல்லி அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பிப் போய் தன்னிலும் பொல்லாத ஏழு ஆவிகளை தன்னோடு கூட்டிக் கொண்டு வந்த உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய முன்னிலைமையிலும், பின்னிலமை அதிகக் கேடுள்ள தாயிருக்கும் " (மத். 15:43,45) என்கிறார். அன்பானவர்களே! பாவமறக் கழுவப்பட்டு சுத்தமாக்கப்பட்ட இருதயமுள்ள விசுவாசிகள் ஒருவருக்கும் இந்தக் கேடு ஏற்படக்கூடாது. நம்மைத் தீட்டுப்படுத்தி கேடுண் டாக்கும் சாத்தானின் சிந்தனைகள் மீண்டும் உள்ளே புகுந்து விடாதபடி "கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த சிந்தையே நமக்குள் நிறைந்து இருக்க வேண்டும் (பிலி. 2:5).

லூக்கா 22:3-ல் " *யூதாஸ் காரியோத் என்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்* " என்ற பரிதாபமான செய்தியை வேதம் நமக்கு முன் நிறுத்துகிறது. இந்த யூதாஸ் இயேசு அழைத்தவுடன் கீழ்ப்படிந்து பின்பற்றி வந்தவன் 3½ ஆண்டுகள் இயேசுவோடே உண்டு, உறங்கி வாழ்ந்ததோடு, அவருடைய உபதேசங்களைக் கேட்டவன், இப்படியிருந்தும் "*அவனுக்குள் சாத்தான் புகுந்தான்*". ஒரு பெட்டிக்குள் இடமில்லாத அளவு பொருட்களால் நிரப்பப்பட்டிருந்தால் மேலும் வேறு பொருட்களை அதனுள்ள புகுத்த முடியுமா? இங்கு யூதாஸ் சரீர அளவில் தான் தன்னை ஒப்புக் கொடுத் தானே தவிர, இருதய அளவில் முழுமையாய் ஒப்புக்கொடுக்கவில்லை. அவன் தன் இருதயத்தில் இயேசுவின் சிந்தனைகளை நிரப்பிக் கொள்ளத் தவறி விட்டான். காலியாய் இருந்த அவன் இருதயத்திற்குள் எளிதாய் சாத்தான் புகுந்து விட்டான்.

அன்பானவர்களே! " தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்.... உங்கள் எதிராளியான பிசாசானவன்.... எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8). அவனுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. நம்மில் ஒருவரும் வாகனத்தில் எரிபொருளுக்குப் பதிலாக குப்பைகளை நிரப்பிக் கொண்டு பயணிக்க முயற்சி செய்யமாட்டோம். பரலோகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிற நாம், நம் உள்ளத்தை கிறிஸ்துவின் சிந்தை களால் நிரப்புவோம். நாம் தேவனுடைய பிள்ளைகள், தேவனுக்கேற்றபடி சிந்திக்க வேண்டும் (மத். 16:23). நம் சிந்தனைகள் நம் விசுவாச வாழ்க்கையை இடித்துப் போட அல்ல. கட்டி எழுப்பக் கூடியதாயிருக்க வேண்டும்.

இதற்கு இசைவாக நம் இருதயங்களில் நிரப்பப்பட வேண்டிய கிறிஸ்துவின் சிந்தனைகளைப் பரிசுத்த ஆவியானவர் பவுலடியார் மூலம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். " கடைசியாக சகோதரரே! உண்மையுள்ள வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெ வைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவை களோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலிப். 4:8) என்கிறார். ஒரு கிறிஸ்தவர் தன்னை நிலை நிறுத்தும்படியாய் அவர் இருதயம் இச்சிந்தனைகளால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். மேலும் வெறும் சிந்தனை மட்டும் பலன் தராது. கோலியாத்தை எதிர்கொண்ட தாவீதின் சிந்தனைகளும், பேச்சும் மிகச்சரியாயிருந்தது. அவைகள் கோலியாத்தை எதிர்த்து நிற்கத் துணை செய்தது. ஆனால், இன்னும் கோலியாத் எதிரில் நின்று கொண்டுதான் இருந்தான். " *நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலின் இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்* " என்று சொல்லி, எப்பொழுது தாவீது கவுன் கல்லை சுழற்றி கோலியாத்தின் நெற்றியில் பட எறிந்தானோ அப்பொழுதுதான் கோலியாத் வீழ்ந்தான். ஆம், சிந்தனையோடு கூடிய செயலில் தான் முழுபலனையும் பெற முடியும். செயலற்ற சிந்தனை செல்லாக் காசுக்கு சமம்.

எனவே தான் பிலி. 4:8-ல் "இவைகளையே சிந்தித்துக் கொண்டி ருங்கள் " என்று சொன்ன பவுலடியார் தொடர்ந்து பிலி. 4:9-ல் " அவைகளையே செய்யுங்கள் " என்கிறார். ஒரு கிறிஸ்தவர் ஒரு செயல் செய்யு முன் பிலி. 4:8ஐ நோக்கி அவரது சிந்தனைகள் குவிக்கப்பட வேண்டும். இச்சிந்தனைகளுக்கும் நம் செயலுக்கும் இசைவு (சம்பந்தம்) இருக்கிறதா? இச்சிந்தனைகளின் வெளிப் பாடாக நம் செயல்கள் இருக்கிறதா? என்று சற்று நிதானித்துப் பார்க்க வேண்டும். தவறு இருக்குமானால் செயலை நிறுத்த வேண்டும். சிந்தனைகளுக்கேற்ப செயலைத் திருத்த வேண்டும். அப்பொழுது சாத்தானின் கேடு விளைவிக்கும் பொல்லாத சிந்தனைகளுக்கு விலகி, நம்மைத் தீட்டுப்படுத்தாமல், நமக்குக் கேடு நேரிடாமல் காத்துக் கொள்ள முடியும். இப்படி நிதானித்துப் பார்க்கத் தவறி, தவறிழைத்து தன்னைத் தீட்டுப்படுத்தி, தனக்கு கேடு வருவித்துக் கொண்ட இரண்டு தேவ பிள்ளைகளை நம்முன் நிறுத்துவதன் மூலம், நம்மை பிலி. 4:8-ன் சிந்தனைக்குள் நிலைநிறுத்த விரும்புகிறேன்.

### முதல் நபர் சிம்சோன் : (நியாயாதிபதிகள் 13,14,15,16 அதிகாரம்)

இஸ்ரவேல் மக்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி, நியாயம் விசாரிக்க தாயின் கர்ப்பத்திலேயே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன். நசரேயன் விரதத்திற்குட்பட்டவன். தேவைப்பட்ட பொழுது " கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கியதால் ", மிகப்பெரிய சாதனைகளைப் புரிந்தவன். ஒரு முறை ஒரு பாலசிங்கத்தைத் தன் கையால் ஆட்டுக்குட்டியை கிழித்துப் போடு கிறது போல் கிழித்துப் போட்டான். மற்றொரு முறை முந்நூறு நரிகளைப் பிடித்து வாலோடே வால் சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்து கட்டி, பந்தங்களைக் கொளுத்தி பெலிஸ்தரின் வெள்ளா மைக்குள் ஓடவிட்டு அவைகளை சுட்டெரித்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி னான். மேலும், ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பை எடுத்து எதிரிகள் ஆயிரம் பேரை அடித்தே கொன்று போட்டான். இப்படித் தேவ ஆவியால் பல வெற்றிகளைக் கண்ட சிம்சோனை இப்பொழுது எதிரிகள் பிடித்து, கண்களைப் பிடுங்கி, விலங்கிட்டு சிறையிலே மாவரைக்க வைத்தனர். மாபெரும் பலசாலி யாக நிமிர்ந்து நின்றவன் எதிரிகள் முன் வேடிக்கை காட்டும் கோமாளியாகக் காட்சியளிக்கிறான். ஏன் இந்த அவல நிலை?.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் தனக்கேற்ற துணை யைத் தேர்ந்தெடுப்பதில், தேவனுக்கேற்ற சிந்தனைக்கு இடம் கொடாமல், தீட்டு என்று தேவனால் ஒதுக்கப்பட்ட பெலிஸ்தரின் பெண் ஒன்றைத் தெரிந்து கொண்டான். மிகப்பெரிய போராட்டத்திற்குப் பின் அந்த முயற்சி தோல்வி யடைந்தது. இப்பொழுது இவன் தன் சிந்தனையின் தவறை உணர்ந்து, தன் சிந்தையைத் தேவனுக்கேற்ற சிந்தனைக்குத் திருப்பியிருந்தால் நிச்சயம் அவன் பலசாலியாகவே எதிரிகளுக்கு முன் நிமிர்ந்து நின்றிருப்பான். ஆனால், தொடர்ந்து அவன் தன் சிந்தனையை வேசிகளை நோக்கித் திருப்பினான். வேசியின் மடியில் படுத்து அந்த மயக்கத்தில் தன் நசரேய விரதத்தை அசட்டை செய்து தன் பலத்தை இழந்தான். ஆம், கர்த்தர் அவனை விட்டு விலகினார். எதிரிகள் அவனை நெருங்கினர். இப்பொழுது சிம்சோன் கோமாளியாகக் காட்சி யளிக்கிறான். நம்மைக் குறித்து வேதம், " நீங்கள் தேவனுடைய ஆலயமாயி ருக்கிறீர்கள்...... ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார் " (1 கொரி. 3:16,17) என்று எச்சரிக்கிறது. நாம் தடுமாறாமல்,

நிதானித்து ஒரு செயலில் ஈடுபடுமுன் இதில், " உண்மை, ஒழுக்கம், நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புண்ணியம், புகழ் " இருக்கிறதா? என்று சிந்தித்தால் நமக்கு கேடு வராது. தேவன் நம்மை விட்டு விலகமாட்டார். மாறாக, சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார் (பிலி. 4:9).

## சிந்திக்கத் தவறிய மற்றொருவர் தாவீது : (2 சாமு. 11:1-27)

மிகச் சிறந்த விசுவாசிகள் கூட பிலி. 4:8-ன் சிந்தனைகளின் படி சிந்தித்து செயல்படத் தவறும் பொழுது மிகப்பெரிய பாவங்களுக்குள் சிக்கிக் கொள்வோம் என்பதற்குத் தாவீதின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சிகள் எச்சரிக்கையாகவும், பாடமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பல வெற்றிகளைக் கண்ட சவுல் ராஜாவும், இஸ்ரவேலின் படைகளும், தனக்கு எதிராக நிற்கும் கோலியாத்தைக் கண்டு பயந்து, நடுங்கி, அவன் முகத்துக்கு விலகி ஓடினார்கள். ஆனால், இளைஞனும், போர்ப் பயிற்சி அற்றவனுமான தாவீது, ராட்சதன் கோலியாத்தை நேருக்கு நேர் சந்தித்தான். அப்பொழுது அவன் வாயிலிருந்த உதிர்ந்த உயர்வான, உறுதியான சிந்தனை களின் வெளிப்பாடு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. (1 சாமு. 17:1-54) 26-ல்... *ஜீவனுள்ள தேவனுடைய* சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்த சேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம். 37-ல் .....*கர்த்தர்* இந்தப் பெலிஸ்தனுடைய கைக்குத் தப்புவிப்பார் என்றான்.

ஆயினும், 11:3,4-ல் பத்சேபால் மாற்றானின் மனைவி என்று தெரிந்தும் அவளோடு சேர வேண்டும் என்று சிந்தித்தது பரிசுத்த தேவ பிள்ளையின் *ஒழுக்கமுள்ள, கற்புள்ள* சிந்தனை அல்ல.

11:5-8-ல் தன்னால் ஏற்பட்ட பத்சேபாளின் கர்ப்பத்தை மறைக்க அவளது கணவன் உரியாவிடத்தில் பாசமுள்ளவன் போல் நடந்து கொண்ட அவன் செயல்களில் அன்புள்ள சிந்தனை இல்லை. நாட்டுப்பற்றுள்ள உண்மை வீரனை, கடமையைச் செய்ய விடாமல் தடுத்து, குடியில் வெறிக்கச் செய்து, முடிவில் நயவஞ்சகமாய் கொலை செய்ததுமான அவன் சிந்தனைகள் *நற்கீர்த்தியுள்ளவைகளல்ல* மேற்கண்ட இச்செயல்கள் அனைத்திலும் புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளுக்குரிய சிந்தனைகளும், செயலும் ஒன்றுமேயில்லை. இப்படி சிந்திக்க வேண்டியவைகளைச் சிந்திக்கத் தவறியதால் அஞ்சாநெஞ்சன் தாவீது கதறுகிறான்.

பல பாவங்களைத் தைரியமாய் செய்தவன், தைரியத்தை இழந்து அழுது புலம்புகிறான். " என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது (சங். 51:2). உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலிரும் (11). இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும் (14). எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னை சூழ்ந்து கொண்டது (42:12). என் இருதயம் சோர்ந்து போயிற்று. உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை. என் பாவத்தால் என் எலும்புகளில் சௌக்கியமில்லை. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. என் இருதயத்தின் கொந்தளிப்பினால், கதறு கிறேன் (சங். 38:6,5,8). " பாவத்தின் மேல் வெற்றி கண்ட நம் ஒருவருக்கும், நெஞ்சை உறுக்கும் இப்படிப்பட்ட கதறுதல் இருக்கக்கூடாது. நாம் ஒரு செயலை ஆரம்பிக்கு முன் இந்தச் செயல் பிலி. 4:8-ன் சிந்தனைகளுக்கு ஏற்புடையதா யிருக்கிறதா? இல்லையென்றால் அச்செயலைத் தவிர்த்து சமாதானத்தோடு வாழக் கற்றுக் கொள்வோம்.


யோசேப்பு அடிமையாய் எகிப்தில் போர்த்திபரின் வீட்டில் வேலை செய்து வந்தான். போர்த்திபரின் மனைவி தன் ஆசைக்கு இணங்கும்படி யோசேப்பை வற்புறுத்தினாள். ஆனால், யோசேப்போ தான் தேவனுடைய பிள்ளை என்பதால் " தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? " என்று சிந்தித்த படியால் அந்த வீட்டை விட்டே வெளியே ஓடினான் (ஆதி. 39:1-12). ஒருவேளை போர்த்திபரின் மனைவியின் ஆசைக்கு இணங்கும் சாத்தானின் சிந்தனைக்கு இழுக்கப்பட்டிருந்தால் யோசேப்பின் சரீர இச்சை நிறைவேறியிருக்கும். ஆனால், அது அற்ப சந்தோஷமாகத்தான் இருந்திருக்கும். ஒருநாளில் அடிமை பிடிபட்டு, அடிபட்டு அடிமையாகவே தான் மரித்திருப்பான். மாறாக இச்சிந்தனைக்கு அடிபணிவதில் *உண்மையில்லை, நீதியில்லை, ஒழுக்க மில்லை, கற்பில்லை, நற்கீர்த்தியில்லை, அன்பில்லை, புண்ணியமில்லை,* புகழ் எதுவுமில்லை என்ற தேவனுக்கேற்ற சிந்தனைகள் அவன் இருதயத்தை நிரப்பியிருந்ததால் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்படாமல் அவனை காத்துக் கொண்டது. அடிமை யோசேப்பு சில காலம் சிறையிலிருந்தாலும், பின்பு அதிபதியாய் உயர்த்தப்பட்டு பலகாலம் பார் போற்றும் உன்னத வாழ்க்கை வாழ்ந்தான். ஆபேல் மரித்தும் பேசுவது போல (எபி. 11:4) யோசேப்பின் வாழ்க்கை இன்றும் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறது.


அன்பான தேவ ஜனமே! பிலி. 4:8-ன் படியாய் *அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். " அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்* ". " அவைகளையே செய்யுங்கள் " அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார் (பிலி. 4:7,9). ஆமென்! ⁂


# நாளும், நடப்பும்



1. உலகப் பேரழிவு நோய் "எபோலா" - உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு
2. இந்தியாவுக்கு எதிராகத் தீவிரவாதிகளைத் தூண்டிவிட்டு பாகிஸ்தான் மறைமுகப் போர் - பிரதமர்
3. நியாயமான நடைமுறையை அமல்படுத்தவே நீதிபதிகள் நியமன ஆணையம் - மத்திய அரசு
4. ஆசிரியர் பணி நியமனங்கள் ஒரு மாதத்துக்குள் முடிக்கப்படும் - தேர்வு வாரியம்
5. ஸ்காட்லாந்து நாட்டின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 20-வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக வீரர்கள், வீராங்கனைகள் சிறப்பாகச் செயல்பட்டனர்.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.






**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:

TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)

## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**


# எங்களது இதர வெளியீடுகள்


சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்


தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்





















# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam